1993 ஏப்ரல் 2] [திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்]

அனுப்புவதற்கு முன்னால் அழைத்து விசாரிக்கலாம் அல்லது கடிதம் மூலம் கேட்கலாமே தவிர அவை உரிமை மீறல் குழுவுக்கு அனுப்புகிறேன் என்று சொல்லுவது முறையாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கராஜன் அவர்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மீது உரிமைப் பிரச்சினை என்று கொண்டு வந்து பேசினார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதை நான் கொடுக்கவில்லை, பத்திரிகைகளுக்கு நேரடியாகத் தர வில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, அவர்கள் அப்படி சொன்னதற்குப் பிறகு பத்திரிகைகள் எப்படி போட்டன, எப்படி பத்திரிகைகளில் வந்தது என்பதைத்தாங்கள் விசாரித்து அதற்குப் பிறகு யார் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரவேண்டுமென்று முடிவு எடுப்பது நல்லது. ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மறுத்துவிட்டார், நான் கொடுக்கவில்லை என்று. ஆக இந்த பத்திரிகையில் வந்திருப்பதற்கு என்ன காரணம்? யார் காரணம் என்பதை விசாரித்து அதற்குப் பிறகு அதில் உரிமை மீறல் எப்படி இருக்கிறது, யார் மீது தொடுக்கலாம் என்பதைத் தாங்கள் முடிவு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் ஆலோசனைக்கு ஏற்ப பத்திரிகை யாளர்களை அழைத்து விசாரித்து அதன் அடிப்படையிலே மேல் நடவடிக்கை தொடரலாம் என்று கருதுவதால் பத்திரி கையாளர்களை விசாரிப்பதற்கான ஏற்பாடுகளைப் பேரவைத் தலைவர் அலுவலகம் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

3. எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளினின்று சில உறுப்பினர்கள் தள்ளிவைக்கப்பட்டிருப்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 120-ன் கீழ் பேரவை யின் இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முழுவதும் கலந்து கொள்ளக்கூடாது. என்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன். திரு. ப. ரங்கநாதன், ஜனதாதள் உறுப்

பணிகளினின்று சில உறுப்பினர்கள் தள்ளிவைக்கப்பட்டிருப்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை.

பினர் டாக்டர் தே. குமாரதாஸ் ஆகிய 3 பேரையும் இந்த கூட்டத் தொடர் முழுவதும் கலந்து கொள்ளக்கூடாது என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள். அந்த கட்டளையை ரத்து செய்துமாண்புமிகு உறுப்பினர்கள் பேரவை நிகழச்சிகளில் இன்று முதல் கலந்துகொள்ள அனுமதிக்கவேண்டுமென்று ஏற்கனவே எழுதியிருக்கிறேன். ஏற்கனவே இந்தப் பிரச்சினை குறித்து பேசியிருக்கிறேன். நான மீண்டும் இப்போது கேட்டுக்கொள்கிறேன், அவர்களை இந்தப் பேரவை நிகழ்ச்சிகளில் இன்று முதல் கலந்துகொள்ள அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல.... (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு: பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதில் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்? அவருடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களைப்பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே ஒரு கோரிக்கையை வைத்து இருக்கிறார்கள். அதற்கு ஒரு முடிவைச் சொல்வதற்கு முன்பாக திரு. திருநாவுக்கரசு அவர்கள்.......... (குறுக்கீடு)

திரு. எஸ். திருநாவுக்கரசு: பாயின்ட் ஆப் ஆர்டர்.....

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பேரவை விதி 120-ன் கீழ் இங்கே வரம்பை மீறி ஒன்றுக்கு இரண்டு முறை நடந்துகொண்ட 3 உறுப்பினர்களைப் பேரவையின் எஞ்சிய நாட்களுக்கு நான் அவையிலிருந்து தள்ளிவைத்திருப்பதை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அந்த 3 உறுப்பினர்களும் பல்வேறு காலக் கட்டங்களில் எந்த அளவில் விதிமுறைகளுக்குப் புறம்பாக இங்கே நடந்து கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அதிலே ஒரு உறுப்பினரான திரு. குமாரதாஸ் அவர்கள் தொடர்ந்து ஒவ்வொரு கூட்டத் தொடரிலேயும் வரம்பை மீறி நடந்து கொண்டு அதன் காரணமாக ஒவ்வொரு கூட்டத் தொடரிலேயும் ஏறத்தாழ திரு. தாமரைக்கனியைப் போலவே அவையிலே இருந்து தள்ளி வைக்கப்பட்டு வந்திருக்கிறார். (கூச்சல் குழப்பம்).

மூற்பகல் 11.20

எனவே அந்த மூன்று உறுப்பினர்களது பிரச்சினையையும் பரிசீலிக்க வேண்டும் என்று சொன்னால், அவர்கள் நடந்து கொண்ட விதத்திற்கு அவர்கள் ஏதேனும் வருத்தம் தெரிவிக்க வேண்டும். இனிமேல் அவர்கள் அப்படி நடந்து கொள்ள மாட்டார்கள் என்பதற்குரிய உத்தரவாதம் எதிர்க்கட்சித் தலைவரிடத்திலேயிருந்து வர வேண்டும். இந்த இரண்டும் வருமேயானால் அதற்கு மேற்கொண்டுதான் அதைப் பரிசீலிக்கலாமே தவிர, அவையின் வரம்பு மீறி நடந்து கொண்ட உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் சாதாரணமாக ஒரு வேண்டுகோளை வைத்து மறுபரிசீலனை செய்வது என்பது இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (கூச்சல் குழப்பம்) தாமரைக்கனியைப் போல நடந்து கொண்டார் என்று நான் எந்த வார்த்தையும் சொல்லவில்லை நீங்கள் ஏன் அதிலே. (குறுக்கீடு) தாமரைக்கனி எப்படி ஒவ்வொரு கூட்டத் தொடரிலேயும், எஞ்சிய நாட்களுக்கு தள்ளி வைக்கப் பட்டாரோ அதைப் போல இவரும் தள்ளிவைக்கப் பட்டே வந்திருக்கிறார் பல்வேறு கூட்டத் தொடரில். (கூச்சல்--குழப்பம்) நான் திரும்பவும் சொல்கிறேன் ; அழுத்தந்திருத்தமாகச் சொல்லுகிறேன், தாமரைக்கனியைப் போல ஏறத்தாழ ஒவ்வொரு கூட்டத் தொடருக்கும், எஞ்சிய நாட்களுக்கெல்லாம் தள்ளிவைக்கப்பட்டே குமாரதாஸ் அவர்களும் வந்திருக்கிறார். இதைத்தான் நான் அப்போதும் சொன்னேன் இப்போதும் சொல்லுகிறேன் (குறுக்கீடு) எனவே அதிலே மேற்கொண்டு பிரச்சினை வேண்டாம். எதிர்க்கட்சித் தலைவர்,

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வைத்த வேண்டுகோளுக்கு நீங்கள் சொல்லியிருக்கிற பதில் எங்களுடைய உணர்வுகளை மேலும் புண்படுத்துவதாக அமைகிறது. ஒருமுறை நான் கேட்டுக் கொள்கின்றபோது, தாமரைக்கனியைப் போல என்று இல்லாவிட்டாலும், தாமரைக்கனியோடு அவரை ஒப்பிடுவது முறையல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, தாமரைக் கனியைப் போல, நான் நடவடிக்கை எடுத்ததைத்தான் சொல்லியிருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமரைக்கனியோடு அவரை ஒப்பிடுவதை நாங்கள் எந்த வகையிலும் ஒப்புக் கொள்ள முடியாது.

பணிகளினின்று சில உறுப்பினர்கள் தள்ளிவைக்கப்பட்டிருப்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருடைய நடவடிக்கைகளை நான் ஒப்பிடவே இல்லை. தயவுசெய்து நீங்கலாக அப்படி அர்த்தம் கற்பிக்க வேண்டாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அதுமட்டுமல்ல, ஒவ்வொரு முறையும் வரம்பு மீறி அவர்கள் நடந்து கொண்டதாகச் சொன்னீர்கள். அந்த இரண்டு உறுப்பினர்களும், எங்களுடைய கட்சி உறுப்பினர்கள் தாக்கப்பட்ட நேரத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இங்கே வந்தார்கள். அதை வரம்பு மீறிய செயல் என்று நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். சரி எப்படியிருந்தாலும் சபை நடவடிக்கைகளிலே கலந்து கொள்கின்ற நேரத்தில் சபை விதிகளுக்கு உட்பட்டுத்தான் நடந்து கொள்ள வேண்டும். அதற்கென்று தனியாக நான் மீண்டும் வலியுறுத்திச் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது. சபையிலே இருக்கின்றபோது, சபை விதிகளுக்குட்பட்டு அவர்கள் நடந்து செல்வார்கள் என்று தனியாக நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லாவிட்டாலும், சபை விதிகளுக்குட்பட்டு அவர்கள் நடந்து கொள்வார்கள். எனவே, அவர்கள் மீது இருக்கின்ற நடவடிக்கையை ரத்து செய்து இன்றைய தினத்திலிருந்து அவர்கள் கலந்துகொள்ள அனுமதிக்க வேண்டுமென்று நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கெனவே இதற்கு என்னுடைய விளக்கத்தைச் சொல்லியிருக்கிறேன்.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு திருவாளர்கள் கே. தவசி, ஓ. ஆர். இராமச்சந்திரன், எஸ். ஆண்டித் தேவர், திருமதி இரா. பாண்டியம்மாள் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள் (குறுக்கீடு) (கூச்சல்--குழப்பம்)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டதற்குப் பதில் சொல்லவில்லையே ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே பதில் சொன்னேனே அந்தச் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களிடமிருந்து (குறுக்கீடு) நான் ஏற்கனவே உங்களுக்குச் சொன்னேன் அந்த சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள், அவர்கள் நடந்து

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் SATYAMEVA JAYATE

கொண்ட விதத்திற்கு வருத்தம் தெரிவித்துஎனக்குக் கடிதம் கொடுப்பார்களேயானால், அதற்கடுத்து, இனிமேல் அப்படி நடந்து கொள்ளமாட்டார்கள் என்கிற உத்தரவாதத்தையும் நீங்கள் தருவீர்களானால், இரண்டையும் வைத்து நான் பரிசீலிப்பேன் (கூச்சல்--குழப்பம்) இல்லை நீங்கள் எனக்கு எழுத்து மூலமாகத் தெரிவித்த வேண்டுகோளையும் தெரிவித்து நீங்கள் எழுப்பிய பிரசசினையையும் சொல்லி.... (குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : எங்களைப் புண் படுத்துகிறமாதிரி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. நான் எதுவும் புண்படுத்தவேஇல்லை. அந்த இரண்டு உறுப்பினர் களையும் தாமரைக்கனியோடு நடவடிக்கை எடுத்து சம்பவத் தோடு ஒப்பிட்டுக் குறிப்பிடவில்லை. நீங்களாக கற்பித்து (குறுக் கீடு) நான் குமாரதாஸ் ஒருவரை மட்டும், தாமரைக்கனியை எப்படி ஒவ்வொரு கூட்டத் தொடரிலேயும் தள்ளி வைத்தே வந்திருக்கிறோமோ அதைப்போல, பெரும்பகுதியான கூட்டத் தொடர்களில் இவரையும் தள்ளிவைத்தே வந்திருக்கிறேன். (கூச் சல்- குழப்பம்) உங்கள் உணர்வைத் தெரிவித்து விட்டீர்கள். என்னுடைய உணர்வையும் நான் தெரிவித்து விட்டேன். அதோடு பிரச்சினை முடிகிறது. (கூச்சல்---குழப்பம்) நான் என்னுடைய தீர்ப்பைத்தான் சொன்னேன். ஏற்கெனவே என்னுடைய தீர்ப்பைச் சொல்லிவிட்டேன் என்று சொல்லித்தான் சொன்னேன் நீங்கள் முதலில் எழுப்பியவுடனேயே நான் சொன்னது..... (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : நான் அவர்கள் சபையில் நடவடிக்கைகளுக்கு உட்பட்டு நடப்பார்கள் என்ற உத்தரவாதத்தைச் சொல்லிவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்று, நீங்கள் அந்த உத்தரவாதம் என்கிற ஒரு பிரச்சினைக்குப் பதில் கொடுத்து விட்டீர்கள். சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்றும் நான் சொல்லியிருக்கிறேன். அது சேர்ந்து வருமேயானால், அதன் பின்னர் அதுபற்றிப் பரிசீலித்து உங்களுக்கு முடிவு சொல்கிறேன்.

முற்பகல் 11-25

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : நாங்கள் கலந்து கொள்ளக் கூடாது ; நாங்கள் சட்டப் பேரவையிலே கலந்து கொள்ளக் கூடாது என்பதுதான் உங்கள் எண்ணம். அதுதான்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை அவ்வளவு வரம்பு மீறி நடந்து கொண்ட உறுப்பினர்கள் வருத்தம் தெரிவிக்காமல் மறுபரிசீலனை செய்ய இயலாது. இங்கே வரம்பு மீறி நடந்து கொண்ட செயல்களுக்காக அவர்கள் தள்ளி வைக்கப் பட்டிருக்கிறார்கள். எனவே, அவர்கள் வருத்தம் தெரிவிக்காமல் மறுபரிசீலனை செய்ய இயலாது.

(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேரவையிலிருந்து வெளியேறினார்கள்).

எதிர்கட்சித் தலைவர் இப்படி உறுப்பினர்களைப் பார்த்து, கையசைத்து இவ்வளவு வற்புறுத்திக் கூப்பிடுவது நல்லது அல்ல. ஒரு எதிர்க்கட்சித் தலைவர் வெளிநடப்பு செய்கிறார் என்றால் அவருக்குப் பின்னாலே அவர் கட்சியினர் செல்கிறார்கள் என்று தான் பொருள். வாருங்கள் என்று வற்புறுத்தி விடாப்பிடியாக (குறுக்கீடு) இல்லை, இல்லை, இப்பொழுது நான் கண்ணெதிரே பார்த்தது (குறுக்கீடு) வெளியே வாருங்கள் என்று வற்புறுத்தி அழைக்கிறார்கள் ; அழைத்தார்கள். இந்த இடத்திலேயிருந்து அழைத்தார்கள். (குறுக்கீடு) சரி, அப்படியே உட்காருங்கள். இருவரும் உட்காருவீர்களேயானால் நல்லது. இருக்க வேண்டு மென்று விரும்புகிறீர்கள், உட்காருங்கள். (சிரிப்பு).

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி : தலைவரவர்களே. . .

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களும்தான் வேண்டு கோள் வைத்தீர்கள். நான் தீர்ப்பைச் சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு வேண்டாம். (குறுக்கீடு) இல்லை, இது முடிந்து விட்டது.

4. கவன ஈர்ப்பு.

உசிலம்பட்டியிலுள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி சரிவர இயங்காமல் இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. தவசி, ஓ ஆர். இராமச்சந்திரன், எஸ். ஆண்டித் தேவர், திருமதி இரா பாண்டி யம்மாள் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர் களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே. தவசி.